# கோலாலம்பூரின் மக்கள் தொகை

# 88 லட்சம் பேராகும்



கோலாலம்பூர், ஆக. 7-

நாட்டின் தலைநகரமான கோலாலம்பூரின் மக்கள் தொகை 88 லட்சமாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 2.25 விழுக்காடு அதிக மாகும். இந்த எண் ணிக்கை வரும் 2030ஆம் ஆண்டில் 98 லட்சம் பேராக உயரும் என எதிர்பார்க் கப்படுவதாக கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தபா கூறினார்.

தலைநகரில் வாழும் மக்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக் கும் பணியில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் இறங்கியுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

கோலாலம்பூரின் மக்கள் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவ தற்கு அங்கு வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு மட்டுமல்லாமல் வெளி மாநிலங்களில் இருந்து கோலாலம்பூருக்கு குடியேறி வரும் தரப்பினரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட் டார்.

கோலாலம்பூர் மாநகரை ஓர் அழகுமிக்க நகரமாக உருவாக்குவதற்கு அரசாங்கம் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களைக் கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அதேவேளையில் புகையால் ஏற்படும் மாசு, பசுமைத் திட்டங்கள் படிப்படியாகக் குறைந்து வருவதையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என நேற்று கோலாலம்பூர் மாநகர் மன்ற கூட்டரசுப் பிரதேசத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வழிகாட்டித் திட்டத்தைத் தொடக்கி வைத்து உரை யாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தலைநகரில் பல மேம் பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.